# மெட்ரோவில் இலவச மருத்துவ முகாம்

**சென்னை, மார்ச் 3–**

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, மெட்ரோ ரயில் நிலையங்களில், வரும், 8ம் தேதி, இலவச மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது.

சர்வதேச மகளிர் தினம், மார்ச் 8ம் தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, வடபழநி, ஷெனாய் நகர், ஆலந்துார், அசோக் நகர், சென்ட்ரல் மற்றும் விமான நிலைய மெட்ரோ நிலையங்களில், இலவச மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது. காலை, 9:00 மணியில் இருந்து, 12:00 மணி வரையும், மாலை, 4:00 மணி முதல், 7:00 மணி வரையும், முகாம் நடத்தப்படுகிறது.

மெட்ரோ நிறுவனம் மற்றும் உடல் நலம் உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் சார்பில், இம்முகாம் நடத்தப்படுகிறது.